# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 135/ந/2017

நாள் : 27/03/2019

**செல்வி எம். கீதா,**
**கொடைக்கானல்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**கொடைக்கானல் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், ஆனந்தகிரி 2–வது தெரு, 13/121 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் செல்வி M.கீதா அவர்களின் 12.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.06.2017 அன்று பெறப்பட்டு, 135/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், ஆனந்தகிரி 2–வது தெரு, 13/121 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் செல்வி M.கீதா என்பவர் தனக்குப் பாத்தியப்பட்ட சாலிமனையில் சிறுபகுதியை பக்கத்து மனை உரிமையாளர் ஆக்கிரமிப்பு செய்து கழிவு நீர் குழாய்களை பதித்துள்ளதாகவும், தன்வீட்டிற்கு வரும் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது குறித்தும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. கொடைக்கானல் நகராட்சி ஆணையர் தனது 05.07.2017 நாளிட்ட கடிதம் எண்.1492/இ2/2017–இல் நகராட்சி உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு உரிய முறையில் குடிநீர் இணைப்பு பழுது நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்று தெரிவித்துள்ளார். இதனை முறையீட்டு மனுதாரரும் உறுதி செய்து இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரரின் மனை நிலத்தில் கழிவு நீர் குழாய் அமைக்கப்படவில்லை என்றும் மாறாக ஸ்ரீதர் என்பவரின் இடத்தில்தான் கழிவு நீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்று தனது 18.03.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்கப்பட்டு விட்டது. மேலும், மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் அண்டை வீட்டின் உரிமையாளரால் கழிவு நீர் குழாய் எதுவும் பதிக்கப்படவில்லை என 20.12.2018 அன்று தள ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 27–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. செல்வி எம். கீதா,
ஏண்.13/119, ஆனந்தகிரி 2–து தெரு,
கொடைக்கானல்,
திண்டுக்கல் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
கொடைக்கானல் நகராட்சி,
கொடைக்கானல்,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி